கற்றலுக்குப் பாதை அமைப்போம்

# முன்னேறுவோம்

# தமிழ்

**TAMIL**

வகுப்பு 5

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்.

## முன்னுரை

2019 முதல் 2021 வரையிலான கோவிட் பெருந்தொற்றின் காரணமாக உருவான சூழ்நிலையால் மாணவர்களுக்கு நேரடிக் கல்வி முழுமையாகக் கிடைக்கவில்லை. மாணவர்களின் கற்றலில் சில இடைவெளிகள் இருப்பதாக 2022 இல் நடைபெற்ற முதல் பருவத்தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்தபோதும், ஆசிரியர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோதும் தெரிய வந்தது. முன் வகுப்புகளில் கிடைக்கவேண்டியிருந்த சில கருத்துகள் மாணவர்களுக்கு மீண்டும் கிடைப்பதற்கும் தொடர்கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகின்ற செயல்பாடுகளை உட்படுத்தி ஒரு சிறுநூல் உருவாக்கி வழங்க உள்ளோம். மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இடைவெளிக்குத் தீர்வுகாணும் வகையில் தேவையான விளக்கங்களும் செயல்பாடுகளும் இந்நூலில் உட்படுத்தப்படுள்ளன. மாணவர்கள் சுய கற்றல் அல்லது ஆசிரியர்களின் உதவியுடன் இச் செயல்பட்டு நூலைப் பயன்படுத்தித் தொடர்கல்வியில் நன்னம்பிக்கையோடு முன்னேற இயலட்டும்; வாழ்த்துகள்.

**இயக்குநர்**

எஸ்.ஸி.இ.ஆர்.டி

## உள்ளடக்கம்

- வாழ்த்து அட்டை
- பாடலை முழுமையாக்குதல்
- சுவரொட்டி
- முத்திரை வாக்கியம் எழுதுதல்
- வாக்கியம் அமைத்தல்
- கதையை முழுமையாக்குதல்
- துண்டு பிரசுரம்

# வாழ்த்து அட்டை

ரேணுகாவும் ஜான்சியும் நண்பர்கள். அப்பாவின் வேலை காரணமாக இடம் மாறிச் சென்ற ஜான்சி ரேணுகாவின் பிறந்தநாளுக்கு ஒரு வாழ்த்து அட்டை அனுப்பியிருந் தாள். அந்த வாழ்த்து அட்டையைப் பார்ப்போமா?

அன்பு ரேணுகா,

இன்று பிறந்தநாள் காணும் உனக்கு எல்லா வளமும் நலமும் பெற உளமாற வாழ்த்துகிறேன்.

அன்புத்தோழி
ஜான்சி

பல்வேறு நிகழ்வுகளுக்கு வாழ்த்து அட்டை தயாரிக்கப்படுகிறது.

- பிறந்தநாள்
- பண்டிகைகள்
- வெற்றிபெற்றவர்கள்

**கவனிக்க வேண்டியவை**

- கவர்ச்சியான அமைப்பு
- சிறந்த மொழிநடை
- செய்தியின் முழுமை
- சுருக்கம், தெளிவு

உங்கள் நண்பர்களுக்காக கிறிஸ்துமஸ் தினத்திற்கு அனுப்புவதற்கான ஒரு வாழ்த்து அட்டை தயாரிப்போமா!

# பாடலை முழுமையாக்குதல்

அனைவருக்கும் பாடல் பிடிக்குமல்லவா! அதிலும் அம்மாவைப் பற்றிய பாடல் என்றால் மிகவும் பிடிக்கும் இங்கு அம்மா என்ற பாடல் முழுமையற்றதாக கொடுக்கப்பட்டுள்ளது. இதனை முழுமையாக்குவோம்.

**என் தெய்வம்**

அம்மா, அம்மா வருவாயே!

அன்பாய் முத்தம் தருவாயே!

அம்மா உன்னைக் கண்டாலே

அழுகை ஓடிப் போய்விடுமே

பத்து மாதம் சுமந்தாயே!

..........................................................................

பத்தியங்கள் காத்தாயே!

..........................................................................

தமிழைக் கற்றுத் தந்தாயே!

..........................................................................

அழகு அழகு என்றிடுவாய்!

..........................................................................

என்னைக் காக்கும் அம்மாவே!

..........................................................................

**கவனிக்க வேண்டியவை**

- ராகம், தாளத்திற்கு ஏற்றாற் போல் சொற்கள் பயன்படுத்துதல்.
- கவர்ச்சியும் தெளிவும்
- கருத்திற்கேற்றவாறு முழுமை செய்தல்.
- பாடலுக்கு ஏற்ற கவிநயம் மிகுந்த சொற்கள்.
- பாடலின் முழுமை

# சுவரொட்டி

காடுகளை அழிப்பதால் ஏற்படும் தீங்குகளை அறியவும் அதற்கெதிரான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் உங்கள் பள்ளியில் நடைபெறும் வனபாதுகாப்பு நிகழ்விற்காக தயாரித்த ஒரு சுவரொட்டி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

**மரம் வளர்ப்போம்! மனிதகுலம் காப்போம்!**

| | | |
|---|---|---|
| நாள் | : | 21.10. 2022 |
| நேரம் | : | 10 மணி |
| இடம் | : | அரசு உயர்நிலைப் பள்ளி, ஏலப்பாறை |
| சிறப்புரை | : | திரு. கார்த்திகேயன் ஐ.எப்.எஸ் |

**மரம் வளர்ப்பதனால் ஏற்படும் நன்மைகள் குறித்துச் சிறப்புரையாற்றுகிறார்.**

அனைவரும் வருக! ஆதரவு தருக!

**மேலே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிபோன்று உங்கள் பள்ளியில் நடைபெறும் ஆண்டு விழாவிற்கான ஒரு சுவரொட்டி தயாரிப்போம்.**

# முத்திரை வாக்கியங்கள்

## தூய்மை இந்தியா திட்டம்

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்து பகுதியிலும் மாணவர்கள் குப்பைகளை அகற்றி தூய்மை செய்ய தீர்மானித்தார்கள். தூய்மை செய்த பகுதிகளில் மீண்டும் குப்பைகளை போடாமல் இருக்க சில முத்திரை வாக்கியங்கள் எழுதி பதித்தனர். அதில் சில இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. மீதியை எழுதுவோம்.

எறியாதே எறியாதே குப்பைகளை
பொது இடங்களில் எறியாதே.

பாதுகாப்போம் பாதுகாப்போம்
பொது இடங்களைப் பாதுகாப்போம்

**கவனிக்க வேண்டியவை**

- தாளத்திற்கு ஏற்ற சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.
- விழிப்புணர்வு ஏற்படுத்தும் கருத்துக்கள் அமைய வேண்டும்.
- சுருக்கமும் தெளிவும் தேவை.

# வாக்கியம் எழுதுதல்

- திருக்குறள் பதினெண் கீழ்கணக்கு நூல்களில் ஒன்றாகும்.
- திருக்குறள் உலகப் புகழ்பெற்ற நூலாகும்.
- திருக்குறளை உலகப்பொதுமறை என அழைப்பர்.

**மேலும் திருக்குறள் குறித்து என்னென்ன தெரியும்? எழுதுவோமா?**

- 
- 
- 
- 
- 
- 

# கதையை முழுமையாக்குதல்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் கதை முழுமையாக் கியதை பாருங்கள்**

ராமுவும் கிஷோரும் நண்பர்கள்

கிஷோர் துரித உணவு சாப்பிடுபவன்.

ஆசிரியர் துரித உணவின் தீமையைக் கூறுதல்.

பள்ளிக்கு வரவில்லை மருத்துவமனையில்

ராமு வீட்டில் சமைத்த உணவை சாப்பிடுபவன்.

தானியங்கள், வீட்டில் சமைத்த உணவு, காய்கறிகள் சாப்பிட முடிவு செய்தல்.

கிஷோர் மாணவர்களுக்கு எடுத்துக் கூறுதல்

உடல்நிலை ஆரோக்கியமாக இருத்தல்

அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**கவனிக்க வேண்டியவை**

- பொருத்தமான தலைப்பு
- சொற்களின் கோர்வை
- கதையின் தொடக்கம், நிகழ்ச்சி, முடிவு
- கருத்துத் தெளிவுடன் எழுதுதல்.

## உணவே மருந்து

ராமுவும், கிஷோரும் நண்பர்கள். அவர்கள் இருவரும் ஆறாம் வகுப்பில் படிக்கின்றனர். இருவரும் நன்றாகப் படிப்பவர்கள். ராமு நாள் தவறாமல் பள்ளிக்கு வருவான். கிஷோர் அடிக்கடி பள்ளிக்கு வருவதில்லை. ஒரு நாள் கிஷோரின் அப்பா பள்ளிக்கு வந்து கிஷோர் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருப்பதாகக் கூறினார். ஆசிரியரும் ராமுவும் கிஷோரைக் காண மருத்துவமனைக்குச் சென்றனர், அங்கு கிஷோரின் அப்பாவும் இருந்தார். கிஷோரின் அம்மா ஆசிரியரிடம் “அய்யா கிஷோர் வீட்டில் சமைக்கும் உணவை சாப்பிடுவதில்லை. எப்போதும் துரித உணவையும் பாக்கெட்டுகளில் உள்ள நொறுக்குத் தீனியை மட்டுமே சாப்பிடுவான், நீங்கள் அவனுக்குப் புத்திமதி கூற வேண்டும்” என்றார். ஆசிரியர் கிஷோரிடம். “கிஷோர் தக்க சமயத்தில் மருத்துவமனைக்கு வந்ததால் நலமடைந்து விட்டாய். இனிமேல் நீ துரித உணவு வகைகளை வாங்கி சாப்பிடக் கூடாது, உன் நண்பன் ராமுவைப் பார். அவன் வீட்டில் சமைக்கும் உணவை மட்டுமே சாப்பிடுகிறான். ஆகையால் அவன் நலமாக இருக்கிறான். இனிமேல் துரித உணவு வகைகளைச் சாப்பிட மாட்டேன் என உறுதிசெய்து கொள் என்றார்.” இதைக் கேட்டு மனம் திருந்திய கிஷோர் “சார் நான் இனிமேல் துரித உணவுகளைச் சாப்பிட மாட்டேன்.” என்றான். ஆசிரியரும் மற்றவர்களும் மகிழ்ச்சி அடைந்தனர். அன்று முதல் பள்ளியில் பிற மாணவர்களுக்கும் வீட்டு உணவின் நன்மைகளைப் பற்றி கிஷோர் எடுத்துக் கூறினான்.

**கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் கதையை முழுமையாக்குவோம்.**

**பொருத்தமான தலைப்பை எழுதுவோம்.**

அடர்ந்த காட்டில் சிங்கம் வாழ்தல்

யானையும் முயலும் நண்பர்கள்

நரி சிங்கத்திடம் ஆலோசனை கூறுதல்

நரி சூழ்ச்சி செய்தல்

யானையும் முயலும் சந்தேகம் அடைதல்

நரி ஆபத்தில் சிக்குதல்.

நரியை யானை காப்பாற்றுதல்

நரி நன்றி கூறுதல்

# துண்டு பிரசுரம்

வேலந்தாவளத்திலுள்ள அரசு ஆரம்பப் பள்ளி வளாகத்தில், இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி காய்கறிகள், பயிர்செய்தனர். இக்காய்கறிகள் கண்காட்சிக்காவும், விற்பனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளன. இச்செய்தியை பொதுமக்களுக்கு அறிவிக்க ஒரு துண்டு பிரசுரம் தயாரிக்கப்பட்டது. அதைப் பாருங்கள்.

**அரசு தமிழ் ஆரம்பப் பள்ளி**

**வேலந்தாவளம்**

அன்புடையீர்,

நமது பள்ளியின் சுற்றுச் சூழல் மன்றம் சார்பில் பள்ளி வளாகத்தில் இயற்கை உரம் மட்டும் பயன்படுத்தி பயிரிடப்பட்ட காய்கறிகள் 2022, நவம்பர் 28 -ம் தேதி அன்று பொதுமக்கள் பார்வைக்காகவும், விற்பனைக்காகவும் வைக்கப்பட உள்ளன.

அனைவரும் வருக! ஆதரவு தருக!

இப்படிக்கு,
கார்த்திக்
பள்ளி மாணவத் தலைவன்.

**கவனிக்க வேண்டியவை**

- சொல்ல வந்த கருத்தைத் தெளிவாகக் கூறுதல்.
- வாசிக்கத் தூண்டுமாறு எழுதுதல்.
- அன்புடையீர், நண்பர்களே எனத் தொடங்குதல்.
- சிறு சிறு பத்திகளாக எழுதுதல்.

## துண்டுபிரசுரம் தயாரிப்போம்

சிற்றூர் அரசு ஆரம்பப் பள்ளி மாணவர்கள் உபயோகமற்ற பொருட்களைப் பயன்படுத்தி தயாரித்த அழகுப் பொருட்கள் 2022 டிசம்பர் 15 - ஆம் தேதி கண்காட்சிக்கு வைக்கப் பட உள்ளன. இந்தக் கண்காட்சியை பொது மக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு ஒரு துண்டு பிரசுரம் தயாரிப்போம்.